2 5 3

உ

ஓம் குஹாயநம:

திருப்புகழமிர்தம்

"திருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றுள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

மலர் 18 | விஜய ஆண்டு தைத் திங்கள் ஜனவரி-1954 | இதழ் 10

திருப்புகழ்

பொது

பாணிக்குட் படாது சாதகர்
காணச்சற் றொணாது வாதிகள்
பாஷிக்கத் தகாது பாதக பஞ்சபூத-
பாசத்திற் படாது வேறொரு
பாயத்திற் புகாது பாவனை
பாவிக்கப் பெறாது வாதனை நெஞ்சமான;

ஏணிக்கெட் டொணாது மீ துயர்
சேணுக்குச் சமான நூல்வழி
யேறிப்பற் றொணாது நாடினர் தங்களாலும்-
ஏதுச்செப் பொணாத தோர்பொருள்
சேரத்துக் கமாம கோததி
யேறச்செச் சைநாறு தாளைவ ணங்குவேனோ;

ஆணிப்பொற் ப்ரதாப மேருவை
வேலிட்டுக் கடாவி வாசவன்
ஆபத்தைக் கெடாநி சாசரர் தம்ப்ரகாசம்-
ஆழிச்சத் ரசாயை நீழலி
லாதித்தப் ப்ரகாச நேர்தர
ஆழிச்சக் ரவாள மாள்தரும் எம்பிரானே;

மாணிக்கப் ப்ரவாள நீலம
தாணிப்பொற் கிராதை நூபுர
வாசபத் மபாத சேகர சம்புவேதா-

வாசிக்கப் படாத வாசகம்
ஈசர்க்குச் சுவாமி யாய்முதல்
வாசிப்பித் ததேசி காசுரர் தம்பிரானே.

பதவுரை

ஆணி பொன் ப்ரதாப மேருவை—ஆணிப் பொன்மயமான புகழ் பெற்ற மேருமலை மீது, வேல் இட்டு - வேலாயுதத்தை ஏவியும், வாசவன் ஆபத்தை கெடா - தேவேந்திரனுடைய துன்பத்தைக் கெடுமாறு செய்தும், நிசாசரர் தம்ப்ரகாசம் - இரவிலே உலாவுகின்ற அரக்கர்களுடைய ஒளியுடைய, ஆழிசத்ர சாயை நிழலில் - சக்கரம் சத்திரம் முதலிய ஆயுதங்களின் சாயையின் நிழல் நீங்க, ஆதித்த ப்ரகாசம் நேர்தர - சூரியனுடைய ஒளியை நிகர்த்து, ஆழி சக்ரவாளம் ஆள்தரும் - வட்டமான சக்ரவாளகிரிவரையுள்ள ஆன்மாக்களை ஆண்டருள் புரியும், எம்பிரானே - எம்மைப் பிரியாமல் இருப்பவரே! மாணிக்கம் - மாணிக்கமணியும், ப்ரவாளம் - பவளமும், நீலம் - நீலமணியும் சேர்ந்த, மதாணி - மார் பதக்கமணிந்த, பொன் கிராதை - பொன்போல் ஒளி பொருந்திய வேடர்குல மகளாகிய வள்ளிநாயகியின், நூபுரம் - சதங்கை யணிந்த, வாச பத்ம பாத சேகர - மணம் வீசுகின்ற தாமரை போன்ற பாதங்களைத் தரித்தவரே! சம்பு வேதா வாசிக்கப்படாத வாசகம் - பிரமதேவர் படித்துக் கூறமுடியாத தனி மந்திரத்தின் உட்பொருளை, ஈசர்க்கு சுவாமியாய் - சிவபெருமானுக்குக் குருமூர்த்தமாக இருந்து, முதல் - அம் முதலெழுத்தை, வாசிப்பித்த தேசிகா - உபதேசித்துப் படிப்பித்த குருநாதரே! சுரர் தம்பிரானே - தேவர்கள் போற்றுந் தனிப்பெருந் தலைவரே! பாணிக்கு உள் படாது - கரங்களால் தொட்டுப்பிடிக்க முடியாததும், சாதகர் காண சற்று ஒணாது - சாதனை செய்வோர்கள் சிறிதுங் காணமுடியாததும், வாதிகள் பாஷிக்க தகாது - சமயவாதிகளால் வாய்விட்டுச் சொல்லமுடியாததும், பாதக பஞ்ச பூதபாசத்தில் படாது - தடையாகவுள்ள ஐம்பெரும் பூத சம்பந்தமான விருப்பத்திற்கு உட்படாததும், வேறு ஒரு உபாயத்தில் புகாது - வேறு ஒரு தந்திரத்தில் சாராததும், பாவனை பாவிக்க பெறாது - இத்தன்மையது இன்ன வடிவுடையது என்று மனதினுல் பாவனை செய்தும் அறியமுடியாததும், வாதனை நெஞ்சம் ஆன ஏணிக்கு எட்ட ஒணாது - வருந்துகின்ற மனமாகிய ஏணிக்கு எட்டமுடியாததும், மீது உயர் சேணுக்கு சமான நால்வழி ஏறி பற்ற ஒணாது - மிகவும் உயர்ந்த ஆகாயம்போன்று பரந்துள்ள

சாத்திரங்களின் வழி சென்று பிடிக்கமுடியாததும், நாடினர் தங்களாலும் ஏது செப்ப ஒணுதது - அறிவினல் நாடிப் பார்த்தவர்களாலும் காரணங் கூறமுடியாததும் ஆகிய, ஓர் பொருள்சேர - ஒப்பற்ற பரம்பொருளை அடியேன் சேரவும், துக்கமாமக உததி - பெரிய துன்பமாகிய பெருங்கடலினின்றும், ஏற - கடந்து கரையேறுமாறும், செச்சை நாறு தாளை வணங்குவேனே - வெட்சி மலர் மணக்கின்ற உமது திருவடிகளை அடியேன் வணங்கி உய்வேனே?

பொழிப்புரை

ஆணிப் பொன் மயமாகிய மேருமலைமீது வேற்படையை விடுத்தும், இந்திரனுடைய துன்பத்தைக் கெடுத்தும், இரவில் உலாவுகின்ற அரக்கர்களுடை ஒளி மிக்க சக்கரம் சத்திரம் முதலிய ஆயுதங்களின் நிழல் விலகும்படி சூரிய ஒளியை ஒத்து சக்ரவாளகிரிவரையுள்ள ஆன்மாக்களை ஆண்டு அருள்புரி கின்ற தலைவரே! மாணிக்கமும் பவளமும் நீல மணியும் பதித்த மதாணியை யணிந்த வள்ளியம்மையாருடைய நூபுரந் தரித்துள்ள மணம் பொருந்திய தாமரைத் தாளைத் தரித்தவரே! பிரமதேவர் படிக்க முடியாத ஓம் என்னும் தனி மந்திரத்தை சிவபெருமானுக்குக் குருவாக இருந்து படிப்பித்த தேசிகரே! தேவர்கள் போற்றும் தனிப்பெருந் தலைவரே! கரங்களால் தொட்டுப் பிடிக்க முடியாததும், சாதனை செய்வோர்களால் சிறிதும் காண முடியாததும், சமயவாதிகளால் இத்தன்மைய தென்று கூற முடியாததும், தடையாகவுள்ள ஐம்பெரும் பூதங்களினல் நிகழும் விருப்பத்திற்கு உட்படாததும், வேறு ஒரு தந்திரதில் சாராததும், மனதாலும் பாவனை செய்து அறிய முடியாததும், வருந்துகின்ற மனமாகிய ஏணிக்கு எட்டாததும், மிகவும் உயர்ந்த ஆகாயம்போல் பரந்துள்ள சாத்திரங்களின் வழி சென்று பிடிக்க முடியாததும், அறிவினல் நாடியவர்களாலும் காரணஞ் சொல்ல முடியாததும் ஆகிய ஒப்பற்ற பரம் பொருளைச் சேரவும், துன்பமாகிய பெருங்கடலைக் கடக்கவும் தேவரீருடைய வெட்சி மலர் மணக்கின்ற திருவடிகளை அடியேன் வணங்குவேனே?

விளக்கம்

பாணிக்குட்படாது:—

ஒருபொருளை ஒவ்வொரு வாயிலாகவே அறியமுடியும். மலரின் மணத்தைக் கண்ணால் கண்டு அறிய முடியாது; கரத்தினுல் தொட்டு அறிய முடியாது; சுவையைக் காதினல் கேட்டு அறிய முடியாது.

மணத்தை நாசியினுலும், சுவையை நாவினுலும் அறிய முடியும். அதுபோல் பரம்பொருளைக் கரங்களால் தொட்டு

அறிய முடியாது. ஏன்? அது அறிவும் அறியாமையுங் கடந்த அறிவே ஒரு திருமேனியாகக் கொண்டது ஆதலினால் அருளறிவினாலேயே அறிதல் வேண்டும்.

சாதகர் காணச்சற் றேணுதை:—

சாதனை செய்வோர்கள பரம்பொருளை இந்த ஊனக் கண்ணுல் காண இயலாது. சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்து தன்மாத்திரைகளையுங் கடந்தது கடவுள். ஆகவே ஐம்பொறிகளால் அறியமுடியாதது.

"முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு காண்பதே ஆனந்தம்"

என்கின்றுர் சைவத்தின் கருவூலமாக விளங்கும் திருமூலர்.

சுவர்க்காதி புவனபோகங்களிலேயுள்ள பற்றையும், மண்ணுலகில் உள்ள பற்றையும், மாதர்மீதுள்ள பற்றையும், மக்கள்மீதுள்ள பற்றையும், செல்வத்தின்மீதுள்ள பற்றையும், தன் ஆன்மாவின் மீதுள்ள அபிமானத்தையும் அறவே ஒழித்த உண்மையுணர்ந்த சிவயோகிகள் மெய்யறிவினாலே அறிவார்கள்.

"வானத்தில் மண்ணில் பெண்ணில் மைந்தரில் பொருளின் ஆசை
தானற்றுத் தமையு நீத்துத் தத்துவ முணர்ந்த யோகர்
ஞானக்கண் கொண்டே யன்றி நாடருஞ் சோதி"
—திருவிளையாடற் புராணம்.

வாதிகள் பாஷிக்கத்தகாது:—

சமயவாதிகள் தாம் தாம் தமது சிற்றறிவால் அறிந்ததையே பொருள் என்று துணிந்து வாதிடுவார்கள். அவர்கள் சமயாதீதமாகிய தனிப்பெரும் பொருளை யறிகிலார்.

"திரமென்று தந்தம் மதத்தையே தாமதச்
செய்கைகொடு உளறஅறிவார்
ஆறு சமயங்கள் தொறும் வேறுவே ருகிவிளை
யாடுமுனை யாவரறிவார்?" —தாயுமானுர்.

"ஊழ்கண்ட சமயத்தன்னுர் உருவுகண்டாரை யொத்தார்"
—கம்பர்.

பாதகபஞ்சபூத பாசத்திற் படாது:—

பாதகம்—தடை.

பஞ்சபூதங்களினால் நிகழும் விருப்பங்கள் உண்மைப் பொருளை யறியத் தடைகளாகும். மண்ணினால் நாற்றமும், தண்ணீரினால் சுவையும், நெருப்பினால் வடிவமும், காற்றினால் பரிசமும், வெளியினால் ஒலியும் ஆக இந்த ஐந்தையும் ஆன்மா விரும்புகின்றது. இந்த விருப்பம் அற்றவர்க்கே அது விளங்

கும். "பொறிவாயி லைந்தவித்தான்" என்றபடி ஐந்தையும் அவித்தவர்க்கே அருள் கிடைக்கும்.

வேருேருபாயத்தில் புகாது:—

உபாயம்—தந்திரம்.

இறைவனை அவனருளே கண்ணுகக் கொண்டு காணுதல் வேண்டும். அந்த அருள் அன்பினுலே எய்தும். எனவே இடையருத அன்பு செய்து, அந்த அன்பினுல் அருளைப் பெற்று, அத்திருவருளால் பரம்பொருளை யடைதல் வேண்டும்.

இந்த நெறியை விடுத்து யாகம், யோகம் முதலியவை செய்தும் வேறுபல முயற்சிகள் செய்தும் எளிதில் பரம் பொருளையடைய முடியாது என வுணர்க.

பாவனை பாவிக்கப் பெறுது:—

மனதினுல் அப்பொருள் இப்படித்து என்று பாவனை செய்யவும் முடியாதது. பாவனுதீதமானது.

"எனதியானும் வேருக எவரும்யாதும் யானெனும்
இதய பாவனுதீத மருள்வாயே"

என்ற திருப்புகழடியும் இங்கு உணர்க.

பாவனை மனதால் புரிவது. மனமற்ற இடத்திலேதான் மெய்யுணர்வு அரும்புகின்றது. ஆகவே அங்கே பாவனைக்கு இடமேயில்லை.

வாதனை நெஞ்சமான ஏணிக்கெட் டொணுது:—

உள்ளத்தில் சதா ஆசாபாசத்தினுல் வாதனையே குடி கொண்டுளது. கிடைத்த பொருளில் திருப்தியுருமலும், இடையாத பொருளை அவாவுவதுமாக நெஞ்சம் உலைகின்றது. மேலும் துன்பத்தை யின்பமாகவும் மாறுபட அறிந்து துன்பத்தைத் தரும் பொருளையே நாடி நாடி நலிகின்றது.

இப்படி யுழல்கின்ற உள்ளமாகிய ஏணியால் இறைவனை யறிய முடியாது.

நூல்வழி ஏறிப்பற்ருேணுது:—

வேத புராண கலைகள் யாவும் அபரஞானமேயாகும். பரஞானம் ஒன்றே பதியை யறிய வழியாகும். அபரஞானத் தால் அறியமுடியாது.

"வேதக்காட்சிக்கு உபநிடத்துச்சியில் விளைந்த
போதக் காட்சிக்கும் காணலன்" —கந்தபுராணம்.

"வாசித்துக் காணுெணுதது" "சுருதியூடு கேளாது" என்றபடி பரம்பொருள் மறைகளுக்கும் எட்டாததாய், வாக் கிறந்த பூ[illegible]து.

நூல் பலவாக விரிந்திருப்பதனல் அது ஆகாயம் போன்றது என்ருர். "கல்வி யென்னும் பல்கடல் பிழைத்தும்" என்பார் மாணிக்கவாசகர். நூலறிவுக்கு அப்பாற் பட்டவன் வாலறிவன் என்பார் திருவள்ளுவர்.

நாடினர் தங்களாலும் ஏதுச்சேப் போணுது:—

அதனை அறியவேண்டும் என்று நாடியவர்களாலும் காரணங் கடந்த கடவுளுக்கு ஒரு காரணத்தைக் கற்பித்துக் கழற முடியாது.

ஏது—காரணம்.

"காரண காரிய லோகப்ர பஞ்சச்
சோக மெலா மற வாழ்வுற நம்பிற்
காசறு வாரிமெய்ஞ் ஞானதவஞ்சற் றருளாதோ?"
—திருப்புகழ்.

ஏதுக்களாலும் எடுத்த மொழியாலும் மிக்குச்
சோதிக்கவேண்டா சுடர்விட்டுளன் எங்கள் சோதி
மாதுக்கம் நீங்கலுறுவீர் மனம் பற்றி வாழ்மின்
சாதுக்கள் மிக்கீர் இறையே வந்து சார்மின்களே.
—சம்பந்தர்.

"மூவருமறிகிலர் யாவர் மற்றறிவார்" என்றபடி இறைவனை தேவரும் மூவருமறிகிலர். அவன் உயிர்கள்தோறும் உள்ளும் புறமும் கீழும் மேலும் முன்னும் பின்னுமாக இருக்கின்ருன். போக்கு வரவு அற்று விளங்குகின்ருன். அவனை இனிய பாடல்களால் பாடுவதை யன்றி கண்டார் அரிது.

"பூதங்கள் தோறு நின்றுயெனி னல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறிவாரை"

ஆனல் ஆண்டவனை அறியவே முடியாதோ? முடியும்; அன்பினுலேயே முடியும். அமரர்க்கு அரியவன்; அன்பர்க்கு எளியவன்.

அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவன்அவன் எனவே
எங்களை யாண்டுகொண் டிங்கெழுந்தருளும்
மதுவளர் பொழில் திரு வுத்தரகோச
மங்கையுள்ளாய் திருப்பெருந் துறைமன்னு
எதுஎமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே,

அமரர்க்கு "அது" என்று சேய்மைச் சுட்டாக நின்ற இறைவன் அடியார்க்கு "இது" என்று அண்மைச் சுட்டாக எதிர் நின்று அருள்புரிவான். "அமரர்க்கும் அரிய அவன் இதோ வந்துவிட்டான்" என்று அடியார் மகிழ வந்து ஆட்கொள்வான்.

துக்கமா மகோததி ஏறச் செச்சை நாறு தாளை வணங்குவேனே?:—

துன்பப் பெருங்கடலைத் தாண்டி இன்பப் பெருங்கடலை யடைந்து இறைவனைச் சாரவேண்டுமானல் அவன் திருவடிகளை இடையறாது வணங்க வேண்டும். அதுவே அதற்கு வழியென்று அடிகள் இத் திருப்புகழில் குறிப்பிடுகின்றார். ஆகவே அன்பர்கள் அனைவரும் இறைவனை அன்புடன் தொழுது துதித்து உய்வுபெறுக.

ஆணிப்பொற் ப்ரதாப மேருவை வேலிட்டு:—

முருகவேளது சாரூபம் பெற்றவரில் ஒருவர் மதுரை உக்ரப் பெருவழுதியாக அவதரித்தனர். மதுரையில் கொடிய பஞ்சம் வந்தபோது, மேருவிடம் சென்று பொற்குவியலைக் கேட்க, அது தராமையால் செண்டால் எறிந்து பொற்குவியலைப் பெற்றனர். அது முருகவேள் திருவருளால் நிகழ்ந்ததனல் அச்செயலை முருகன் செயலாக வைத்து இங்கே பேசப்பட்டது.

நிசாசரர் தம்ப்ரகாசம்...................ஆள்தரும்:—

அசுரர்களுடைய ஆயுதங்களையெல்லாம் ஒழித்து சக்ரவாள கிரி வரையுள்ள ஆன்மாக்களை ஆண்டவன் காத்தருளினன்.

பூமியின் முடிவில் அதற்கொரு கோட்டை வைத்ததுபோல் வளைந்திருக்கும் மலை சக்ரவாளகிரி.

அத்திரம்—வில்லை விட்டுச் சென்று போர் புரிவது.

சத்திரம்—கையில் இருந்தபடியே போர் புரிவது. அசுரர்களுடைய பாணங்கள் யாவும் முருகனுடைய அருள் ஒளியில் மறைந்தன என்கின்றார்.

எம்பிரான்:—

பிரியான் என்பதன் மரூஉ பிரான் என்பது. நம்மை விட்டு ஒருபோதும் பிரியாதவன்.

கிராதை.....................பாத சேகர:—

கிராதை—கிராத குலத்தில் வந்தவள்; வள்ளி. வள்ளியின் பாதத்தைத் தரித்தவன் என்பது அடியவர்க்கு எளியவன் என்பதைக் குறிக்கின்றது.

"வேதாமுதல் விண்ணவர் சூடுமலர்ப்
பாதா குறமின் பதசேகரனே"

என்ற அநுபூதி வாக்கையும் இங்கு உன்னுக.

சம்புவேதா வாசிக்கப்படாத வாசகம்:—

பிரமதேவர் வேதத்தின் முதல் எழுத்தாகிய ஓம் எனும் தனி மந்திரத்தின் உட்பொருளைக் கூறமாட்டாது திகைத்து நின்றனர்.

ஈசர்க்குச் சுவாமியாய் முதல் வாசிப்பித்த தேசிகா:—

சிவபிரானுக்கு அத் தனிமந்திரத்தைக் குருமுகமாக இருந்து ஓதுவித்தருளினர். அதனல் சிவகுருவானர்.

கருத்துரை

வள்ளியை யாண்ட வள்ளலே! சிவகுருநாதரே! மெய்ப்பொருளை யடைந்து துன்பங் கடந்து இன்ப முற உமது திருவடிகளை வணங்க அருள் புரிவீர்.

ஸௌராஷ்ட்ர நீதிஸம்பு

125. மனமறிந்து உண்மையை மறைத்துவிட்டு மற்றவர்கள் நம்பும்படி பொய்யை சாமர்த்தியமாக சபையில் சொல்பவர்களுக்கு அநேக கேடுகள் சம்பவிக்கும்.

126. விரோதி கூட ஒருசமயம் நல்ல புத்தி சொல்லலாம். குருகூட ஒருவேளை துர்புத்தி புகட்டலாம். ஆகையால் இதை அறிந்து ஒரு தந்தை தன் மகனுக்கும், ஒரு குரு தன் சிஷ்யனுக்கும் எப்பொழுதும் நன்மையே போதிக்க வேண்டும்.

127. எவன் வியாதி யின்றி இருக்கின்ருனே? எவன் பசித்த நேரத்தில் கிடைத்ததை உண்கின்ருனே, எவன் கஷ்ட காலத்தும் கோபித்துக் கொள்ளாமல் கடமையைச் சரிவர செய்கின்ருனே, அவனே உண்மையில் பற்று அற்ற வாழ்வை நடத்துபவன் ஆகின்ருன்.

128. ஒன்பது விஷயங்களை மனதில் ரகசியமாக வைத்துக் கொள்ள வேண்டும். வயது, செல்வம், குடும்பவிஷயங்கள், புனித மந்திரங்கள், ஸ்திரிசம்பந்தங்கள், மருந்து வகைகள், தர்மங்கள், பெருமை, சிறுமை.

உ

திருச்சிற்றம்பலம்

பெரிய புராணம்

நரசிங்க முனையரைய நாயனுர் புராணம்

''மெய்யடியன் நரசிங்கமுனையரையற் கடியேன்''

திருமுனைப்பாடி நாட்டையாளும் மன்னர் மரபில் அவதரித்தவர் நரசிங்கமுனையரைய நாயனுர். இவர் மன்னறம் வழுவாது மாநிலத்தையாண்டுவந்தார். திருநீற்றில் அளவிறந்த அன்பு பூண்டிருந்தார். பற்பல மன்னர்களை வென்று வீரமும் வெற்றியும் விளங்க இனிது வாழ்ந்தார். சிவனடியார்களைக் கண்டால் எதிர்கொண்டு இறைஞ்சி இனிது உபசரிப்பார்.

சிவபெருமானுடைய திருக்கோயில்தோறும் பல நிபந்தங்கள் அமைத்து, காலந்தோறும் வழிபாடுகள் வழுவாது நடைபெறுமாறு செய்வித்தார். நித்திய நைமித்திக பூசைகள் சிறப்பாக நடாத்துமாறு செய்தார். நல் விழாக்கள் நடாத்தினுர்.

திருவாதிரைதோறும் சிவமூர்த்தியை மிகவும் சிறப்பாக வழிபாடு செய்து மகிழ்வார். அன்று அடியார்களுக்கு அன்னமளித்து ஒவ்வொரு அடியார்க்கும் ஒரு நூறு பொன் கொடுத்து வணங்குவார். திருநீற்றையும் திருநீறணியும் அடியார்களையும் பேணிப் பெரிதும் மதித்து மனமகிழ்வார்.

இவ்வாறு பலகாலும் ஒழுகிவரும்போது ஒரு திருவாதிரை நாளில் வழக்கம்போல் அடியார்கள் வந்தார்கள். அடியார்கட்கு அன்னமளித்து சொன்ன மளித்து வரும்பொழுது, வந்தவர்களில் ஒருவர் தூர்த்தராக இருந்தார். காமக் குறியுடைய அவரைக் கண்டு மற்ற அடியார்கள் ஒதுங்கினுர்கள்.

நரசிங்கமுனையர் அடியார்களை நோக்கி, "நீங்கள் இவ்வாறு இவரை இகழக் கூடாது. தூர்த்தராயினும் திருநீறு பூசியவர்களை இகழ்ந்தார் நரகடைவார். ஆகவே எவராயினும் திருநீறு பூசியவரைப் பூசிக்கவேண்டும்'' என்று கூறி அத் தூர்த்தரைப் பணிந்து அவர்க்கு இரட்டியாக இருநூறு பொன் கொடுத்து கனியமுதன்ன இனிய மொழி கூறி விடைகொடுத்தனுப்பினுர்.

சீலம்இல ரேஎனினும் திருநீறு சேர்ந்தாரை
ஞாலம் இகழ்ந் தருநரகம் நண்ணுமல் நண்ணுவார்
பாலணைந்தார் தமக்களித்த படிஇரட்டிப் பொன்கொடுத்து
மேலவரைத் தொழுதினிய மொழிவிளம்பி விடைகொடுத்தார்.

இவ்வாறு இடையறுது திருத்தொண்டு புரிந்து, திருந்திய சிந்தையராகிய சிவபெருமானுடைய திருவடி நிழலைச் சார்ந்து இன்புற்ருர்.

விளக்கம்

திருமுனைப்பாடி நாடு

சோழநாட்டிற்கும் தொண்டைநாட்டிற்கும் இடையில் உள்ள நாட்டிற்கு நடுநாடு என்று பேர். அந்நாட்டில் ஒரு பகுதியாக விளங்குவது திருமுனைப்பாடி நாடு.

அரசர்கள் போர் புரிய பாடி வீடு பல அமைத்து ஆண்டதனால் இப்பேர் பெற்றது. இந்த நாட்டின் பெருமை அளவிட முடியாதது. சமயகுரவர்களாகிய நால்வர்களில் திருநாவுக்கரசு சுவாமிகளும் சுந்தரமூர்த்தி நாயனரும் அவதரித்த நாடு திருமுனைப்பாடி நாடு.

புண்ணியத்தின் கருவூலமாக விளங்கிய அந்நாட்டை அறநெறி தவறாது அரசாண்டவர் நரசிங்கமுனைய நாயனர்.

நரசிங்கமுனையரைய நாயனர்

இவர் சிவாலயங்களைப் பாதுகாத்து, பூசைகள் குறைவற நடக்குமாறு நிலங்களை முற்றூட்டாக வழங்கி சிவ புண்ணியஞ் செய்தார்.

ஆலய வழிபாடு குறையாது நடைபெறுமானல் நாட்டில் மாரி மாறிடாது மும்முறை பொழியும். வளம் பெருகும். குளம் நிறையும். நாடு தழைக்கும்.

இவர் திருநீற்றைப் பெரிதும் பேணி, அதனிடம் அளவற்ற அன்புடையவராய் வாழ்ந்தார்.

திருவாதிரை நாள் சிவமூர்த்திக்கு உவந்த நாள் ஆதலின் அன்று வந்த அடியார்கட்கு அன்னமுஞ் சொன்னமும் வழங்கினர். புண்ணிய நாளில் புரியும் அறத்திற்கு அதிக பயனுண்டு.

ஆறணிந்த சடைமுடியார்க் காதிரைநாள் தொறுமென்றும்
வேறுநிறை வழிபாடு விளங்கியபூ சனைமேவி
நீறணியுந் தொண்டர்அணைந் தார்க்கெல்லாம் நிகழ்பசும்பொன்
நூறுகுறை யாமலளித் தின்னமுது துகர்விப்பார்.

திருநீறு பூசினர் யாவராயினும் அவரை வணங்கி வழிபட வேண்டும் என்பதை இவர் உலகமறியக் காட்டியருளினர். அது சரிதானே? என்று ஐயுறுவாறுமுளர். அரசாங்கத்தில் வேலை பார்ப்போரில் ஒழுக்கமில்லாதவர் அரசாங்க உடையுடுத்து வருவாராயின் அவரை ஏனைய குற்றங் குறைகளைக் கவனியாது, அந்த உத்யோக உடை கண்டு அவரை மதிக்கின்றோமல்லவா? அதே போல நீறணிந்தார் அந்தரங்கத்தில் தவறுளராயினும் அவர் அணிந்த திருநீற்றை மதித்து வணங்குதல் வேண்டும் என உணர்க.

சேரமான் பெருமாள் நாயனர், முடிசூடி முதல் நாள் யானை மீது பவனிவரும்போது எதிரே வந்தவனை ஏகாலி என்று அறிந்தும், அவன் மீதுள்ளது உவர்மண் என்று அறிந்தும், திருநீற்றுவேடத்தை நினைப்பித்தது என்ற ஒன்றைக் கருதி அவன் பாதத்தில் விழ்ந்து வணங்கினர் என்றால் திருநீற்றினை நமது முன்னேர்கள் எப்படிப் போற்றிவந்தார்கள் என்பதை இங்கு நினைவு கூர்க.

"எவரேனுந் தாமாக இலாடத்திட்ட
திருநீறுஞ் சாதனமுங் கண்டால் உள்கி
உவராதே யவரவரைக் கண்ட போது
உகந்தடிமைத் திறநினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவர் என்றுசொல்லி
இரண்டாட்டா தொழிந்தீசன் திறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சினுள்ளே
கன்ருப்பூர் நடுதறியைக் காண லாமே. —அப்பர்.

திருவாதிரை

திருவாதிரை சிவபெருமானுக்கு உவந்த நட்சத்திரம். அன்று சிவமூர்த்தியைச் சிறப்பாக வழிபடவேண்டும்.

திருநீலநக்க நாயனர் திருவாதிரையில் சிறப்பாகப் பூசித்தார் என்பதையும் அவர் வரலாற்றில் காண்க.

"ஆயசெய்கையில் அமருநாள் ஆதிரைநாளில்
மேய பூசனை நியதியை விதியினல் முடித்து"

திருவாரூரில் திருவாதிரைத் திருவிழா மிகச் சிறப்பாக நிகழ்ந்தது. அதனைக் கண்குளிரக் கண்ட அப்பரடிகள் அவ்வாதிரை விழாவைச் சிறப்பித்துப் பாடியருளியுள்ளார். அதில் ஒரு பாடல் வருமாறு.

முத்து விதான மணிப்பொற் கவரி முறையாலே
பத்தர்க ளோடு பாவையர் சூழப் பலிப்பின்னே
வித்தகக் கோல வெண்டலை மாலை விரதிகள்
அத்தன் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம்.

அதனல் இவர் ஆதிரை நட்சத்திரந்தோறும் அடியார்களை உபசரித்து ஒவ்வொருவருக்கும் அன்னமளித்து நூறு பொன் தரும் நியதியை மேற்கொண்டு ஒழுகினர். அதனல் சிவகதி பெற்றார்.

திருநீறு:—

திருநீறு சிவபெருமானுடைய திருவருளைப் பெறுவதற்கு மிகச் சிறந்த சாதனமாகும். திருநீற்றை அன்புடன் ஐந்தெழுத் தோதி அணிய வேண்டும். அங்ஙனம் அணிவார் வினைகள் நீறுபடுவதனால் இதற்கு **நீறு** எனப் பேர் வந்தது. மேலான செல்வமாக விளங்குவதால் **விபூதி** எனப்படும்.

பசுவின் மலம் வெந்து சாம்பலானது திருநீறு; அதுபோல் பசுக்களாகிய ஆன்மாக்களின் மும் மலங்களையும் சுட்டு நீறுக்கச் செய்யும் ஆற்றலுடையது என்ற அருட்குறிப்பும் உடையது.

கவசம்போல் உடலையும் உயிரையுங் காப்பாற்றுவது திருநீறு. அதனால் அதற்கு **ரட்சை** என்ற பேரும் உண்டு. "கங்காளன் பூசுங் கவசத் திருநீறு" என்கின்ருர் திருமூல நாயனர்.

ஈயம் பூசிய ஏனங்களில் நவாசாரம் முதலிய நச்சுப் பொருள்களை மாற்றப் பசுவின் சாணத்தைக் கரைத்துவைப்பதையும், நேர்வாளத்தின் நச்சுத்தன்மையை மாற்றப் பசுவின் சாணத்தில் ஊறவைப்பதையும், அன்பர்கள் கவனிக்க. பசுவின் சாணத்தாலாகிய சாம்பலைத் தெளித்து அவரைச் செடியை அழிக்குங் கரிய பூச்சிகளை அகற்றுவதையும் உன்னுக. ஆகவே பசுவின்சாணத்தாலாகிய திருநீறு நமது உடம்பிலுள்ள நச்சுக் கிருமிகளையழித்து, உடலுக்கும், உயிருக்கும் உறுதிபயக்கும் என்பது ஒருதலை. எனவே சைவ சமய அன்பர்கள் அனைவரும் திருநீற்றை அன்புடன் அணிந்து அருள் பெறுக.

ஸௌராஷ்ட்ர நீதிஸம்பு

129. மழை பொழியாமல் நிலங்கள் விளைச்சல் கொடுப்பதில்லை. பணத்தைப் பாதுகாக்காவிடின் அது பெருகாது. குழந்தைக்கு அது கேட்பதற்கு முன்னமே தாய் உணவும் உடுக்கையும் கொடுக்கின்ருள். தந்தை தானுகவே மகனைக் கல்வி புகட்டுகின்ருன். ஓ பிரியனே! இவை யாவும் இயற்கை.

130. யோகி, கிழவன், பக்தன், ஆத்மீகன், ஜெயில்கைதி, குழந்தை, வியாதியஸ்தன் இவ்வேழுபேர்களுக்கும் முறைப்படி விரதம் அனுஷ்டிக்காவிட்டால்கூட பாவங்கள் வராது.

ஸௌராஷ்ட்ர நீதிஸம்பு முற்றிற்று.

உ

முருகா

கற்பு

பிங்களபுரி என்ற நகரத்திலே **சுதர்மன்** என்ற வணிகன் ஒருவன் இருந்தான். அவன் இளமையிலே தாய் தந்தையரை இழந்தான். அந்த ஊரிலுள்ள ஒரு பெரிய முதலாளியிடம்போய், அவரை அடுத்து அவர் கடையில் சேர்ந்து, வியாபாரத்தைக் கண்ணுங் கருத்துமாகச் செய்தான். அதனால் முதலாளிக்கு இவன் மீது அபிமானம் உண்டாகியது.

பல ஆண்டுகட்குப்பின் சுதர்மனிடம் சிறிது பொருள் சேர்ந்தது. முதலாளியின் அநுமதி பெற்று சொந்தமாகத் தனியே ஒரு கடை வைத்து வியாபாரம் புரிந்தான். பம்பரம் போல் சுழன்று சரக்குகளை வாங்குவதும், ஆசாமிகளிடம் இனிய வார்த்தைகளைப் பேசி விற்பதுமாக இருந்தான். சில காலத்திற்குப் பின் பெரும் பொருள் சேர்ந்தது.

சுநந்தை என்ற பெண்மணியை மணந்து கொண்டான். சுநந்தை ஏழை வீட்டுப் பெண். பெரிய தனவந்தனாகிய சுதர்மனை மணந்துகொண்ட அவளுக்கு வாழ்வு சுவர்க்கலோக வாழ்வு போல் மகிழ்ச்சியைத் தந்தது. கணவனார் கருத்தறிந்து எல்லாப் பணிவிடைகளும் அன்புடன் செய்வாள். குறிப்பறிந்து ஒழுகிவந்தாள். சுதர்மனும் சுநந்தையும் உள்ளம் கலந்து கள்ளமில்லாமல் வாழ்ந்துவந்தார்கள்.

சுநந்தை நாடோறும் மாலையிலே திருவிளக்கு வைத்து அதில் மகாலட்சுமியை ஆவாகனம் புரிந்து மலர் சூட்டி தூப தீபங் காட்டிப் பால் பழம் நிவேதித்துப் பூசிப்பாள். அதனால் லட்சுமி கடாக்ஷம் உண்டாக மேன்மேலும் செல்வம் ஓங்கியது. மாளிகையும், நிலபலமும், மாடு கன்றுகளும், வண்டி வாகனங்களும், ஆடையாபரணங்களும் ஏராளமாகப் பெருகின. உறவினர்களும் நண்பர்களும் வந்து போற்றிப் புகழ்ந்தார்கள்.

பெரிய கூட்டங்களில் தலைமை தாங்கிச் சுதர்மன் புகழ் பெற்றான். பற்பல தானதருமங்களைச் செய்தான். கற்றாரும் மற்றாரும் வந்து அவனைப் பாடியும் பரவியும் பரிசுபெற்றார்கள். அந்த வூரிலுள்ள இடிந்த சிவாலயத்தைப் புதுக்கிச் சிறந்த முறையில் கும்பாபிஷேகம் புரிந்தான். அதற்குச் சில நிலங்களை எழுதிவைத்து நித்திய பூசை ஒழுங்காக நடைபெற ஏற்பாடு செய்தான்.

இதனால் அவன் புகழ் மேலும் மெருகிடப் பெற்றது. அக்கோயில் விழாவில் சிறந்த மேளம், வேதபாராயணம், இன்னிசை யரங்கு முதலிய சகல சிறப்புகளும் நிகழும்.

ஒரு சமயம் இன்னிசையரங்குக்குக் காகிநாடாவிலிருந்து "கானபூஷணி" **கங்காபவானி** என்றவள் வந்து அழகான முறையில் இன்னிசை பாடினாள். அவள் குயில் போன்ற குரலைக் கேட்டும், மயில் போன்ற சாயலைக் கண்டும் மயங்காதவர் இலர். சுதர்மன் அவளைக் கண்டு மதுவுண்ட வண்டு போல் மயங்கினான். அவளைத் தனியில் சந்தித்துப் பேசி மகிழ்ந்தான். அவளை அந்த வூரிலேயே தனி வீடு தந்து அதில் குடியேற்றினான். ஒருவருக்கும் தெரியாமல் இரவில் போய் அவளுடன் கலந்து களிப்பான். அவள் வீட்டுக்குள் நுழையும்போதும் வெளிப்படும்போதும் யாராவது பார்த்துவிடுவார்களோ? என்று அஞ்சினான்.

நாள் செல்லச் செல்லக் கங்காபவானியிடம் அளவற்ற காதல் வைத்து, அவளுக்கு நிரம்பிய பொருளை யீந்தான். அன்றியும் தன் மனைவி சுநந்தையை வெறுக்கவும் தொடங்கினான். அவள் கை உடம்பில் பட்டால் முள்பட்டது போலவும், அவள் பேச்சு நாராசம் போலவும், அவள் கையால் சமைத்த வுணவு ஆலகாலவிடம் போலவும் ஆயின. கணவனுருடைய இந்த மாறுபட்ட செயலைக் கருதி சுநந்தை ஆறாத் துயரமுற்றாள்.

கங்கா பவானி யென்ற தாசியைத் தன் கணவன் உறவு கொண்டு அவள் மையலில் வீழ்ந்து மயங்கித் திரிவதையறிந்து வருந்தினாள். அவளுடைய உள்ளத்தில் பெருஞ் சிந்தனைப் புயல் வீசியது. கடல் கொந்தளித்தது போன்ற கலக்கமுண்டாகியது. கண்ணீர் ஆறுகப் பெருகியது. உள்ளம் உருகியது. முகங் கருகியது. பூஜை வீட்டில் சென்று முருகப்பெருமான் திருமுன் நின்று, "முருகா! மூவர் முதல்வா! வள்ளி மணவாளா! வடிவேலரசே! மெய்ஞ்ஞான பண்டிதா! எல்லாஞ் செய்ய வல்லவனே! என் கணவனுர் உள்ளத்தில் மூண்டுள்ள காமக்கனலை அவித்து அவருக்கு நற்புத்தியைக் கொடுத்தருள்வாய். எம்பெருமானே! அவரிடம் இதுபற்றிப் பேச எனக்குத் திடமில்லையே! என் செய்வேன்? நீதான் எனக்குத் துணை. என் முறைக்குச் செவிசாய்த்துக் கருணை புரிவாய்" என்று கூறி முறையிட்டு அழுதாள்; தொழுதாள்.

முதல்முதலாகக் கள்ளருந்த அக் கடையில் நுழைவோர்கள் முக்காடிட்டு நாணத்துடன் செல்வார்கள். பின்னர் நிரம்பக் குடித்து நடுரோட்டில் பாடி ஆடிப்புரண்டு உருளுவார்கள். மது மயக்கந் தன்னை மீறிச் சென்று அவரை அலங்கோலப் படுத்தும். அக் கள் வெறியைவிடக் கொடியது காமவெறி; கள் என்று நினைத்தால் வெறி யுண்டாகாது; கள்ளைக் கண்ட மாத்திரத்தில் வெறியுண்டாகாது. காமவெறி தான் விரும்பிய

ஒருத்தியை நினைத்தவுடனேயும், பார்த்தவுடனேயும் வந்து அவனை மறக்கச் செய்யும்.

> உள்ளக் களித்தலும் காணவுவத்தலும்
> கள்ளுக்கில் காமத்துக் குண்டு.

என்கின்றார் திருவள்ளுவர்.

ஆதலினால் சுதர்மன் வெளிப்படையாக கங்கா பவானியின் வீட்டுக்குப் போய்வரலானான். ஊரவர் கூறும் பழிக்கு நாணினானில்லை. பாவத்திற்கு நடுங்கினானில்லை. வியாபாரத்திலும் இப்போது கவனமில்லை. எல்லாம் அவனது காரியஸ்தர்கள்தான் கவனிக்கின்றார்கள். அவன் புகழ் மாசுபட்டது.

ஒருநாள் சுதர்மன் அருகிலே உள்ள ஊருக்குப் போய் திரும்பினான். இரவு மணி பத்து இருக்கும். நேரே கங்கா பவானி வீட்டிற்குச் சென்றான்; கதவு தட்டினான். கதவு திறக்கப்படவில்லை. ஒருமுறை மெல்லத் தட்டியவுடனே கதவு திறந்து காதலுடன் வரவேற்பாள் கங்காபவானி. அன்று அத்தனை முறை தட்டியும் பயனில்லை. அவன் மனம் சிந்தாகுல மடைந்தது. காரணம் அறியாது திகைத்தான். அவள்பால் வேறு ஒருவன் வந்துளானோ? என்று ஐயுற்றான். மீண்டுந் தட்டினன்.

கதவு திறக்கப் பட்டது. தன்வசம் அழிந்து நிற்கும் கங்கா பவானியைக் கண்டான். அவள் கண்களில் முத்து முத்தாய் கண்ணீர் சிந்திக்கொண்டிருந்தன. முகஞ் சிவந்திருந்தது. பெரிய வாட்டத்துடன் துவண்ட கொடிபோல் நின்றாள்.

“பெண்மணியே! என் கண்மணியே! ஏன் அழுகின்றாய்? உனக்கு என்ன கவலை? என் உயிரை வேண்டுமானாலுந் தருவேன். இத்தனை நாளாக ஒருமுறை தட்டியவுடன் கதவைத் திறப்பாயே! இன்று பலமுறை தட்டியும் கதவைத் திறக்கவில்லையே? காரணம் யாது? உள்ளதைக் கூறு” என்று சுதர்மன் வினவினான்.

“ஐயா! இங்கு வாரும்” என்று அவனைத் தன் பூசை வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனாள். “இதோ பாரும் இந்த முருகன் படத்தை. இதை ஒருவர் கொண்டுவந்து கொடுத்தார். இதற்கு மாலையிட்டு அலங்கரித்தேன். ஆ! ஆ! என் உள்ளம் உருகுகின்றது.

> “எழுதரிய அறுமுகமும் அணிநுதலும் வயிரமிடை
> இட்டுச்சமைந்த செஞ் சுட்டிக் கலன்களும் துங்கநீள்பன்
> னிருகருணை விழிமலரும் இலகுபதி னிருகுழையும்
> ரத்தனக் குதம்பையும் பத்மக் கரங்களும் செம்பொனாலும்

மொழிபுகழு முடைமணியும் அரைவடமு மடியிணையும்
முத்தச் சதங்கையும் சித்ரச் சிகண்டியும் செங்கைவேலும்
முழுதுமழகிய குமர கிரிகுமரி யுடனுருகு
முக்கட் சிவன்பெருஞ் சற்புத்ர உம்பர்தம் தம்பிரானே"

என்று அருணகிரிநாத சுவாமிகள் பாடியருளியுள்ளார். இன்றிருந்தார் நாளையில்லை. மானுட சரீரம் கிடைத்தற்கரிய மாணிக்கம். அப்பன் அழகுக்கு ஆயிரங்கோடி மன்மதர்கள் ஒன்றுபடினும் இணையாகாதே. அந்த அழகிய என் ஆண்டவனைக் காணும் நாள் என்றோ? அவன் பாதமலரில் ஊறும் பேரின்பத் தேனைப் பருகுவது என்றோ? இந்த ஊன உடம்பை—நாறுகின்ற மலபாண்டத்தை - சீழும் உதிரும் பொங்கி வழிகின்ற புலால் உடம்பை - புழுக்கள் நிறைந்த பொய்யுடலை விரும்பி அலைகின்றீரே! நானும் இதை விலைப்படுத்தி அலைந்தேனே! என் ஆண்டவனுடைய ஞானத் திருமேனியைக் காண என் மனந் துடிக்கின்றது. அவன் காட்சியை அருணகிரிநாதர் கண்டாரே! எனக்கு அக்காட்சி கிட்டாதா? இந்த மாயவுடம்பை விற்று தூய வாழ்நாளைப் போக்கித்திரியும் என் வாழ்வு ஒரு வாழ்வா? இதோ பாரும். என் முருகன் என்னைப்பார்த்து நகைக்கின்றான். முக்கோடி காக்கைகள் கூடினாலும் ஒருவன் ஒரு கல்லை விட்டு எறிந்தவுடன் அத்தனைக் காக்கைகளும் கலைந்துபோவதுபோல், நான் புரிந்த வினைகள் அத்தனையும் என்னப்பன் கருணைவெள்ளத்தால் அழிப்பேன் என்று கூறுவதுபோல் கையைக் காட்டுகின்றான். பயப்படாதே என்ற அபயகரத்தைப் பாரும். இரும்புமனமும் உருகுமாறு கரும்புரசமும் கசக்குமாறு அவன் கண்மலரின்கருணைபெருக்கெடுத்து ஓடுகின்றதே. இந்த ஞானவடிவை நாடாமல் - இந்த இன்பக் கடலை நாடாமல்—இந்த கருணைக் குன்றைக் கூடாமல், கேவலம் மலம் நிறைந்த உடம்பை நான் விரும்புவதும், நீர் என்னை விரும்புவதுமாகிய இந்த பொய்ம் மாய வாழ்வை எண்ணும் போது என் இதயம் துடிக்கின்றது. இவ்வாழ்வு கசக்கின்றது.

கரும்பிருக்க இரும்பைக் கடிக்கலாமா? காமதேனுவின் பாலிருக்கக் காடி நீரைக் குடிக்கலாமா? கற்பக நிழலிருக்கக் கள்ளிச் செடியை நாடலாமா? மாணிக்க மிருக்க மண்ணாங் கட்டியை விரும்பலாமா? இதோ பாரும். எம்பெருமானுடைய சௌந்தர்யத்தை. ஆ! ஆ! கோடி சந்திரப் பிரகாசம் போன்ற அப் பரம கருணாநிதியின் திருமுகத்தைக் காணவேண்டாமா? பிறவிப் பெருங்கடலைக் கடத்தும் அவன் திருவடியைப்பெறும் வழியை நாடவேண்டாமா? வாழ்நாளை வீழ்நாளாக்கி மீளா நரகுக்கு ஆளாவது அறிவுடைமையாகுமா? ஒரு வேளைக் குளிக்கவில்லையானால் நாறுகின்ற இந்த உடம்பையும், ஒரு வேளை வாய் கொப்புளிக்கவில்லையானால் மிகவும் நாறுகின்ற இந்த வாயையும் பீளை வடிகின்ற இக் கண்ணையும் கண்டுகளிக்க

லாமா? ஐயனைப் பாரும். உமது உள்ளம் உருகவில்லையா? இந்த அழகிய வடிவில் ஈடுபட்டிருந்ததனால் நீர் கதவு தட்டியதை என் செவி கேட்கவில்லை'' என்றாள். அவ்வாறு கூறும்போது அவள் அங்கம் பதறியது; ஒவ்வொரு மொழியிலும் உண்மையும் உணர்ச்சியும் மாசற்ற பக்தியும் ஒளிசெய்தன. உயிர் உள்ள அச்சொற்களைக் கேட்டு திகைத்து ஓவியச் சிலைபோல் நின்றான் சுதர்மன்.

அவன் மனத்தில் இருந்த காமக்ரோதங்கள் குடியோடு விடைபெற்றுக்கொண்டு அகன்றன. அவன் கண்களிலும் நீர் பெருகியது. முருகா! என்று அலறினான். அது தன் மனைவி பூசித்த படம் என்பதையும், தன் தவறுதலையும் உணர்ந்து கங்காபவானியின் கால்மீது அடியற்ற மரம்போல் விழுந்து வணங்கினான்.

“அம்மா! நீயே என் குரு. என் ஆசாபாசங்களை அகற்றி, அஞ்ஞான இருளை நீக்கி மெய்ஞ்ஞான விளக்கை ஏற்றிய உன்னை நான் குருவாகக்கொண்டேன். இனி இந்த மாயவாழ்வை விரும்பேன். திருமுருகன் கருணையைப் பெற முயலுவேன். ஆ! உன் வாக்கிலிருந்து வந்த ஒவ்வொரு பொன்மொழியும் என்னைப் புடம்போட்டு எடுத்தது. மனமாசு நீங்கியது. அருள்நாட்டம் ஓங்கியது. வுணக்கம் வணக்கம்'' என்று கூறி மீட்டும் அவளை வணங்கினான். முருகன் திருமுன் நின்று “முருகா! உன் திருவிளையாடல்தான் என்னே! இவளை அதிஷ்டித்து எனக்கு நீ உபதேசித்தாய், உன்னை மறந்து, உன் அருளைத் துறந்து இத்தனை நாள்களாய் அலைந்தேன். இனி உன்னை மறவேன். என் குற்றங்களையெல்லாம் பொறுத்து, என் பிறவியின் வேரறுத்து என்னை யாண்டருளுவாய்'' என்று முறையிட்டான்.

அங்கிருந்து புறப்பட்டான். தன்மனைவியிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு முருகன் தலயாத்திரை செய்து உய்ய வேண்டும் என்று எண்ணி தன் வீட்டுக்கு வந்தான். வீட்டிலே தன் மனைவியைக் காணாது திகைத்தான். அங்குள்ள வேலைக்காரனைப் பார்த்து “அம்மா எங்கே?'' என்று கேட்டான்.

“ஐயா! பூசைப்படத்தைக் கொண்டுபோய் தாசியம்மாவிடம் கொடுக்கச்சொன்னாங்க. நான்தான் கொண்டுபோய் கொடுத்தேன். அம்மா அழுதுக்கிட்டேயிருந்தாங்க. பூசை வீட்டிலே தான் இருந்தாங்க, நல்லா பாருங்க'' என்றான்.

சுதர்மன் பூசை யறையில் நுழைந்து பார்த்தான். சுகந்தை பத்மாசனமிட்டு அமர்ந்திருந்தாள். அவள் உடம்பில் மெல்லக் கை வைத்தான். உடம்பு சந்தனம் போல் குளிர்ந்திருந்தது. உடம்பில் உயிரில்லை. ஆ! என்று அலறினான். அப்போது அவன் மனத்தில் உண்டாகிய வேதனையை யார் அளக்கவல்லார்? உணர்ச்சியற்று அப்படியே நின்றான். நெடுநேரம் பொறுத்து ஒரு பெருமூச்சு வந்தது. பூசைப்படத்தைக் கங்காபவானியின் வீட்டிற்கு அனுப்பிவிட்டு அவள் முருகன் கழல் சார்ந்தாள் என்பதையும், அவள் பூஜாபலன் கங்காபவானிக்கு நல்லுணர்வைப் புகட்டி, அவள் மூலம் தன்னைத் திருத்தியது என்பதையும், கற்புடைய மங்கையர் பெருமையையும் உணர்ந்தான்.

மனைவியின் உடம்பை பூத்தேரில் கொண்டுபோய் சமாதி வைத்தான். சமாதிக்கோயில் அழகாகப் புதுக்கி தன் உடைமை முழுவதையும் அதற்கு எழுதிவைத்தான். அச் சமாதிக்கோயிலில் சதா பஜனையும், அன்னதானமும், பூஜையும் நிகழ ஏற்பாடு செய்தான். அச் சமாதியை வழிபட்டு வந்தான்.

அறமொழிகள்

32. மழையில்லையேல் மன்னுயிர்கட்கு வாழ்வில்லை. இழை நூல் இல்லாமல் எங்ஙனம் ஆடையைக் காணமுடியும்?

33. உணவால் உயிர்கள் வாழ்கின்றன. உணவு மழையால் உண்டாகவேண்டும். மழைக்குத் தானமும், தவமும், உண்மையும், ஒழுக்கமும் வேண்டும்.

34. மக்களிடம் அறமும், மன்னனிடம் நீதியும், மாதர்களிடம் கற்பும், ஆலயங்களில் வழிபாடும் குறைந்தால் மழையும் குறையும்.

35. மழையில்லையே என்ற வருத்தம் போன்று, உண்மை ஒழுக்கம் இல்லையே என்ற வருத்தம் மக்கள் யாவரிடமும் முதலில் வரவேண்டும்.

36. மழையை வரவழைக்கவோ வந்த மழையை நிறுத்தவோ மனித சக்தியால் முடியாதிருப்பதைக் கண்டும்; இறைவன் சக்தியைச் சிலர் உணராதிருப்பது விந்தையாகயிருக்கின்றது!

உ

முருகா

துணை

[வித்துவான் தி. மு. சங்கரலிங்கம்,

தமிழாசிரியர், கௌமாரமடாலயம், திருவாமாத்தூர்.]

(ருகூ-ம் பக்கத் தொடர்ச்சி)

விழிக்குத் துணை கண்கவர் பொருளல்ல; கந்தன் கழலடித் தாமரை. அம் மலரடித் துணையாயின் வேண்டுவதுவேறென்று மின்று. உண்மை மொழிக்குத் துணை உதவியற்ற வீண் பேச்சல்ல; 'முருகா' என்ற மூன்றெழுத்து மோகன வார்த்தையாகும். இதுவன்றோ வாழ்வில் மறுமலர்ச்சியைத் தருவது. முன் பிறவியிற் செய்த பழியை ஒழிக்கத் துணை மேலும் வினைகளைச் செய்து கொள்வதல்ல. அயில் தாங்கும் ஆறிரு புயங்கள் துணையாகும். பன்னிருதோளும் பாவம் பழி இவைகளை நீக்கும் பண்புடையதன்றோ? வழிக்குத் துணை மானிடரல்ல. அவன் வடிவேலும், அழகு மயிலுமாகும். வெல்லுந் தன்மை யுடையது வேல்; மலைவை நீக்கும் தன்மையை உடையது மயில். ஆகையின் இவை யனைத்தும் நிலைத்த உண்மைத் துணைகளாகும் என்றருளுவதைப் பாருங்கள். இனி இவை யின்றேல் பாவ வலையிற் பட்டுப் பதைத்து வருந்துவர் வெயிலிற் புழுத் துடிப்பதுபோல. இவைகளை யறிந்து அவனியில் மக்கள் நல்வழி செல்ல வைப்பதன்றோ ஆன்றோர் செயல். அம் முறையில் உலக மக்கள் இவ் வுண்மையை உணரவேண்டும் என எண்ணித் தீட்டினர் ஏட்டில் அருணை அடிகள். இதோ பாருங்கள் அருந்தமிழ்ப் பாடலை:

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனும் நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிருதோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலும்செங் கோடன் மயூரமுமே.

(கந்தரலங்காரம் 70.)

இனி, மற்றோர் இடத்திற் கூறும் கருத்தைப் பாருங்கள். "நீ நாளும் நன்னெஞ்சே நினைகண்டாய்" என்பது போல யான் நாளும் விடமுண்டகண்டன் மைந்தனை முருகனைக் 'கந்தா!' என்று கூறித் துதிப்பதற்குத்தவறுவதில்லை. அன்றிவேறொரு தொண்டையும் செய்தற்கு என்னால் இயலாது; சத்தியுமில்லேன். நெடுநாள் வருந்திப் பலவாறு கற்ற கல்வியும் போய் என்னை உறவென்று கொண்டாடிய மனைவி, மக்கள், தாய், சுற்றத்தார் முதலியோர் வாயில் மட்டும், தெரு மட்டும், சுடுகாடு மட்டும் வந்து எனக்குத் தீயை வைத்துத் திரும்பிப் போய் விடுவரே யன்றி எப் பிறப்பினும் துணையாவார் ஒருவருமில்லை.

அந்தோ! இம் மட்டோ, மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து பொறிகளும் மெய்யிலே குடிகொண்டு என் வாழ்வில் வளம்பெற ஒவ்வொன்றும் தன் கடமைகளை ஏற்று புலன்களை அனுபவித்து காலத்தே யாற்றிக் கவினுறச் செய்து துணையான அவைகள் ஆவி பிரியும்போது பாவியேனை விட்டுக் கைவிட்டனவே. துணையாக வந்திலவே அந்தோ! என் செய்கோ? ஆதலின் என்றும் நிலைத்து அடியவரைக் காக்கும் அமரர் கோமானே! நின்னிடம் அடைக்கலமாக வந்தேன்; எனக்குத் துணையாகவேண்டும். எனக்குத் துணையாகிப் புரக்க வேண்டும். இன்றேல் யான் அழிந்துபடுவேன்'' என்று வருந்தி நெஞ்சு நெக்குருக கருங்கல் மனமும் கசிந்துகக் கண்கள் தொடு மணற்கேணியென சுரந்து நீர் பாய அருளுகின்றார். இனி அவ் வடிகள் கூறும் அவ் வருமைத் தமிழ்ப்பாடலைப் பாருங்கள்:—

மைவரும் கண்டத்தர் மைந்த! கந்தா என்று வாழ்த்துமிந்தக்
கைவருந்தொண்டன்றி மற்றறியேன் கற்றகல்வியும்போய்ப்
பைவரும் கேளும் பதியும் கதறப் பழகிநிற்கும்
ஐவரும் கைவிட்டு மெய்விடும்போதுன் னடைக்கலமே.

(கந்தரலங்காரம் 84)

இவ்வாறு நிலையென்பவெல்லாம் நிலையற்றுப் போகத் துணையில்லாது வருந்துவர். ஆகையால் துணையேதுமின்றித் தவிக்கும் நாம் தாவிப் படரக் கொழுகொம்பான நிலையான பரம்பொருளைத் துணையெனக் கொண்டு வாழ்ந்து மனிதப் பிறவியின் பயனை அடைந்துய்தல் கடனாகும்.

அறமொழிகள்

37. கோடிக்கணக்கான பணத்தைச் செலவழித்து ஒரு குறிப்பிட்ட பகுதியில் விஞ்ஞான முறையில் மழையை பெய்விக்க முயல்பவர்களாலும் இயற்கையாக வரும் மழையை நிறுத்த இயலாதே?

38. பிற உயிர்களின் துன்பத்தைக் கண்டபோதே பச்சாத்தாபமும், கேட்டபோதே கருணையும் கொள்வது பெரியோர்கள் இயல்பு. கனலருகே யுள்ள வெண்ணெய் கரைந் துருகுவது இயற்கை தானே.

39. வாடிய பயிரைக் கண்டு வருந்தும் வள்ளல்மரபன்றோ! எனவே தேடிய ஆற்றல்யாவையும் மன்னுயிர்த் தொண்டுக்கே பயன்படுத்துவர் பெரியோர்.

273

உ

முருகா

தியாக மூர்த்தி

(அன்பன் மு. பெருமாள்)

(உ௬உ-ம் பக்கத் தொடர்ச்சி)

மறுநாள் செட்டியார் கடையில் அமர்ந்திருந்த போது பழைய பாக்கிதாரனை பக்கிரிசாமி போய்க்கொண்டிருந்தான். ஏண்டா பக்கிரிசாமி? ஏன் கடனைக் கொடுக்காமல் காலங் கடத்துகின்றாய்! நாணய மில்லாதவனே! சேரவேண்டிய கடனைக் கொடுத்துவிட்டு அடியெடுத்துவை. என்று அவனைத் தடுத்து நிறுத்திவிட்டார் செட்டியார். ஐந்து பத்தாக நூறு ரூபாய் வரை கொடுத்துவிட்டு, அவனை ஏமாற்றி ஐந்நூறு ரூபாய் பாக்கி சேரவேண்டுமென எழுதி வாங்கிக்கொண்டிருந்தார்.

ஆகவே பக்கிரிசாமி செட்டியார் பொய் கணக்கு காட்டி தன்னை ஏமாற்றிவிட்டதால், தான் அவரை ஏமாற்றுவது என்று உள்ளத்தில் எண்ணியவனாய், செட்டியாரே! உன் பணத்துக்கு நான் பிள்ளையாகப் பிறந்தேனா என்ன? நான் என்றோ தங்கள் பணத்தைத் திருப்பிக் கொடுத்திருப்பேன். ஆனால் தாங்கள் பணம் கொடுக்கும்போது, நான் பிறருக்குப் பணம் கொடுப்பேனே ஒழிய, யாரிடமும் பணத்தைக் கேட்டு வாங்கும் நிலைமையில் நான் ஏழையாக யில்லை என்று தெரிவித்தீர்களே! ஆகவே செட்டியார் பணம் கொடுப்பாரே ஒழிய வாங்கமாட்டார் என்று நான் கொடுக்காமல் இருந்துவருகிறேன். நான் கொடுத்தாலும் தாங்கள் வாங்கமாட்டீர்கள் என்று எனக்குத் தெரியாதா என்ன? தாங்கள் சொன்ன சொல்லை மாற்றக்கூடியவரல்லவே. தாங்கள் பிறரிடம் பணம் வாங்கும் ஏழ்மையான நிலையில் இல்லையே! தரும குணம் நிறைந்த தாங்கள் என்னைக் கூப்பிட்டு இவ்விதம் பரிசோதனையும்; பரிகாசமும் செய்யலாமா செட்டியாரே!

அடேய் என்ன சொன்னாய்! நான் பிறருக்குப் படிக்கும் பாடத்தை,என்னிடமே படிக்க முற்பட்டுவிட்டாயா? உன்னால் என்னை ஏமாற்றவும் முடியாது. உன் சமர்த்தும் என்னிடம் பலிக்காது. வட்டியும் அசலும் சேர்த்து கட்டிவிட்டுப்போ. உன்னை விடமுடியாது. இல்லையேல் அவமானப்படுவாய்.

செட்டியாரே! ஏன் இப்படி ஏளனம் செய்கின்றீர்கள். தாங்கள் சொன்ன சொல்லைத்தானே தெரிவித்தேன். தாங்கள் கடுமையாகப் பேசினாலும் நான் கோபம் வைக்கப்போவதில்லை. நான் போய்வரட்டுங்களா என்று நகர்ந்தான்.

இச்சம்பாஷணைகளைக் கேட்டுக்கொண்டிருந்த செட்டியாரின் இளைய குமாரன் இராமசாமி அது சமயம் குறுக்கிட்டு அப்பா! முற்பகல் செய்யின் பிற்பகல் விளையத்தானே செய்யும்; அன்று திருப்பணிக் கமிட்டியாரை ஏமாற்றினீர்கள். இன்று இவன் தங்களை ஏமாற்றுகிறன். மேலும் அவன் பேரில் பொய் கணக்கு எழுதி அவன் மீது அநியாய முறையில் கடன் சுமை ஏற்றி யிருக்கின்றீர்கள்! இங்ஙனம் அநீதியான வழியில் பொருள் சேர்த்து எங்கள மீதும் பாவச் சுமையை ஏற்றவேண்டாம்., பாடுபட்டுத் தேடி அநியாயமான முறையில் சேர்க்கும் பணம் நாளை தாங்கள் கூடுவிட்டுப் போகையில் கூடவா வரப்போகின் றது? தாங்கள் தேடிய இப் பணம் பெட்டியோடு நிற்கும். எங்கள் தாயார் தெருவோடு நிற்பாள். பிள்ளைகளாகிய நாங்கள் மயானத்தோடு நின்று பிரிவோம். தங்கட்கு உடன் வருவது தருமமும், பாவமும்தான். ஆகவே திருப்பணிக் கமிட்டியாரை ஏமாற்றிய தங்கட்கு இந்தத் தண்டனை வரத் தான் செய்யும் என்று கூறி பக்கிரிசாமியை அனுப்பிவிட்டான்.

அடப்பாவி மகனே! நான் பாடுபட்டுத் தேடிய பணத்தை நாசமாக்க என் வயிற்றில் பிள்ளையாக வந்து பிறந்தாயே! பணத்தின் அருமை தெரியாதப் பயலே! உன்னல் என் பணம் அழியுங் காலம் வந்துவிட்டதே! கடன்காரனுக்கு அனுகூலம் பேசும் கெட்டபுத்தி உனக்கு எங்கிருந்துவந்தது என்று தெரிய வில்லையே! என் பணம் அழிவதற்கு முன் உன்னல் நானே அழிந்து போவேன் போல் தெரிகின்றதே! என்று செட்டியார் படுக்கையில் மூர்ச்சித்துச் சாய்ந்தார்.

அப்பா! என்மீது வருத்தம்வேண்டாம். அறவழி நின்று பொருள் தேடி அறப்பணிகள் செய்வதே மக்கள் பிறவியின் முக்கியக் கடமையாகும். அன்பும் அறனும் இல்லாத வாழ்வு வெறும் அவ வாழ்வாகும். தவ வாழ்வு வாழ்ந்து நம் வாழ் வைச் சிவ வாழ்வாக ஆக்கிக்கொள்ளவேண்டும் என்றுதான் நான் கூறுகின்றேன் என்றுன் இராமசாமி.

இதற்கிடையில் செட்டியார் பணம் போச்சே! போச்சே! என்று பிதற்றிய வண்ணம் பெருமூச்சுவிட்டு மண்ணுலகை விட்டு மறைந்தார். இரு குமாரர்களும் உறவினர்களும் சேர்ந்து அடக்கம் செய்து இறுதிச் சடங்குகளையும் முடித்து, செட்டி யாரின் இரு புதல்வர்களான பாண்டுரங்கனும், இராமசாமியும் மனமொத்து வாழ்ந்து வந்தார்கள். இருப்பதை எல்லோர்க்கும் இல்லையென்று கூருமல் வழங்கி இருவரும் அறச் செல்வர் களாக விளங்கினர்.

இரண்டு ஆண்டுகள் கழிந்த பின்னர் இருவருக்கும் மணம் செய்விக்கவேண்டுமென எண்ணி அவர்கள் தாயார், பக்கத்தூரி லுள்ள பெருஞ் செல்வரான பழநிவேல் செட்டியார் இல்லத் துக்குப் பெண் பார்க்கப் போனுர்கள். பழநிவேல் செட்டியா

ருக்கு இரு குமாரத்திகளே உண்டு. அவருக்கு வேறு சந்ததிகளில்லை. இரு பெண்களும் இலக்குமி யென அழகில் விளங்கினர். இரு பெண்களையும் கண்ட மூத்தவன் பாண்டுரங்கன் அவர்கள் அழகில் உள்ளம் பறிகொடுத்தவனாய் தானே அவ்விரு பெண்களையும் மணக்க வேண்டும். தன் தம்பிக்கு வேறு எங்காவது பெண் பார்த்து முடித்து வைக்கலாம் என்ற முடிவுக்கு வந்து விட்டான்.

அப் பெண்கள் இருவரும் இளையவனான இராமசாமியையே மணப்பது. இல்லையேல் தங்கட்குத் திருமணமே வேண்டாம் என்று தங்கள் தாயாரிடம் கூறிவிட்டார்கள். இளையவன் இராமசாமி இளைய பெண் இராதாபாய்மீது காதல் கொண்டான். ஆகவே மூத்தவளைத் தன் தமயன் மணஞ் செய்து கொள்ளட்டும் என்று கருதி தன் கருத்தைத் தன் தாயிடம் தெரிவித்தான். இந் நிலையில் மூத்தவன் தன் தம்பியையும், தாயாரையும் அழைத்து தன் விருப்பத்தைக் கூறி எப்படியாவது அந்த இரு பெண்களையும் எனக்குப் பேசி முடியுங்கள். இல்லையேல் தனக்குத் திருமணம் வேண்டாம் என்று திட்டமாகத் தெரிவித்துவிட்டான். இளையவன் இராமசாமி தன் தமயன் விரும்பியபடியே செய்ய தன் மனதிலுள்ள காதலையும் துறந்து விட்டுக் கொடுத்துவிட்டான். இரு தரப்பு முடிவுகளையும் கேட்ட பெண்ணின் தகப்பனார் பழநிவேல் செட்டியார் இதென்ன பெருத்த தரும சங்கடமாக வந்து முடிந்ததே! என்று வருந்தினார். தன் குமாரத்திகளுக்கு தக்க சமாதானங் கூறியும் அவர்கள் இசையவில்லை. மூத்தவன் பாண்டுரங்கனும் தன் கருத்தை மாற்ற முடியாது, மணந்தால் அந்த இரு பெண்களையும் மணப்பேன்; இல்லையேல் திருமணமே எனக்கு வேண்டாம் என்று கூறி ஊருக்குத் திரும்பிவிட்டான். ருக்மணியும், ராதையும் இளையவரைத்தான் மணப்போம் இல்லையேல் எங்கட்கு கன்னி வாழ்வுதான் எனத் திட்டமாகக் கூறியதால் திருமணம் தடைப்பட்டுவிட்டது.

இளையவன் இராமசாமி யோசித்தான். இதுபோன்ற சூழ்நிலையில் நமது நீதியான கடமையைச் செய்ய நம்மை நாம் தியாகம் செய்ய முற்படவில்லையேல் நாம் மனிதனாய்ப் பிறந்துதான் பயன் என்ன? வாழ்க்கையில் அற்ப போகங்களையும், ஆசைகளையும் அநுபவிப்பதைவிட நீதியையும், தியாகத்தையும் பிறருக்கு வழங்க முற்படுவதே மேலான ஆனந்தமாகும். அதுதான் மனிதப் பண்புங்கூட. ஆகவே நம் தமயன் நலத்துக்காக நம் காதலைக் கைவிட்டும் பயனில்லை. நாம் இந் நிலையில் இருக்கின்ற வரையில் அப் பெண்கள் நம்மையே விரும்புவார்கள். ஊனையும் உடலையும் சுருக்கி உள்ளொளி பெருக்கும் தவ வாழ்வை மேற்கொண்டால், அவ் விரு பெண்களது மனம் மாறி நமது தமயனை மணக்க இசைவார்கள். அதன் பின்னர் அவர்கள் மூவரும் மகிழ்ந்து வாழட்டும் என்று முடிவு செய்து

தன் தமயனரிடம் தனக்குச் சேரவேண்டிய பங்குப் பணத்தைப் பெற்று, ஆலயத் திருப்பணிகட்கும் அன்னதானத்துக்கும், கல்விச் சாலைகட்கும், வழங்கிவிட்டு முற்றுந் துறந்த முனிபுங்கவரைப் போல் கால்நடையாக யாத்திரை சென்று விட்டான். தனக்கென ஒன்றும் வைத்துக் கொள்ளாமையால் வேளை உணவு தவறிவிட்டது. பசியாலும், நடையாலும் உடல் இளைத்து இளமை எழில் குன்றிவிட்டது. கந்தவேள் பெருமானை எந்த வேளையும் எண்ணிய சிந்தையனாய் எங்கெங்கும் சுற்றி அலைந்தான். உடல் நலங்குன்றி ஒய்ந்து சாய்ந்தான் ஒரு குளத்தருகில். அவ்வழியே சென்ற இரு யுவதிகள் தங்கள் தந்தையைக் கூப்பிட்டு யாரோ பரதேசி மூர்ச்சித்து கிடக்கின்ருர். அருகில் சென்று ஏதேனும் சிகிச்சை செய்து உதவுங்கள் என்று கூறினர்கள்.

அம்மா யாத்திரையாக வந்த யிடத்தில் நமக்கு வழிப் போக்கரை உபசரிக்க சாத்யமாகுமா? வாருங்கள் போகலாம். அதோ சுவாமி வீதிவலம் புறப்பட்டுவிட்டார். தரிசனம் செய்யலாம்.

தண்ணீர்! தண்ணீர்! என்று கையைத் தாவி உயர்த்தி பெருமூச்சுவிட்டான் இராமசாமிசாமி. அவ்விரு பெண்களுமஓடி வந்து குளத்து நீரைக் கொண்டுவந்து எட்ட நின்று தந்தையாரைக் கொடுக்கச் செய்தனர். நீரருந்தி நிமிர்ந்து நோக்கினன். பெண்கள் இருவரும் பார்த்த முகமாய்த் தோனுதே எனச் சிந்தித்தனர். என்னவேண்டும் என்றனர். செவ்வேள் பெருமானைச் சிந்தித்து மகிழ்வதை விட சன்னியாசியாகிய எனக்கு வேறு என்னவேண்டும்? என்றுன் இராமசாமி சாமி. எங்களால் ஏதேனும் உதவி வேண்டுமாயின் கூறுங்கள். வைத்திய சாலைக்கு அழைத்துக் கொண்டுபோய் விடுகின்ருேம். வருகின்றீர்களா என்று கேட்டனர் அப் பெண்கள்.

இராமசாமி சாமிக்கு அவர்கள் இன்னுரென்ற நினைவுவந்து விட்டது. சகோதரிகளே! உங்கள் இருவரது பிடிவாதத்தால் தான் என் வாழ்வு இந்நிலை அடைந்தது. நீங்கள் இருவரும் எனக்கு உதவி செய்ய மனமிருந்தால் நான் கோருகின்ற உதவியை மறுக்காமல் செய்வீர்களாயின் என் உடல் நலமடையும் என்றுன்.

அந்த இரு பெண்களும் தாங்கள் தேடி அலையும் காதல் திருவுருவந்தான் இங்ஙனம் மங்கிக் காட்சியளிக்கின்றது என மனம் வருந்தி கண்ணீர் சொரிந்து, தங்களால் எங்கள் இருவர் வாழ்நாளும் வீழ்நாள்களாகக் கழிந்துவருகின்றது. தாங்கள் யாத்திரை சென்ற செய்திகேட்டு நாங்களும் யாத்திரை கிளம்பினேம் எங்கள் தந்தையாருடன். இனியேனும் எங்கள் விரதத்தை மனமுவந்து நிறைவேற்றுங்கள் என வேண்டினர்.

என் தமயன் நலனுக்காக உங்கள் மீதுள்ள காதலைத் தியாகம் செய்தேன். என் செல்வத்தை - சுக போகத்தைத் தியாகம் செய்தேன். ஆனால் மனம் சாந்தியடையவில்லை. காரணம் என் குறிக்கோள் நிறைவேறவில்லை. என் மீது உண்மையாக விருப்பமுள்ளவர்களாயின், எனக்காக உங்களைத் தியாகம் செய்யவேண்டுகிறேன். என் தமயனார் உங்களை விரும்புகின்றார் என்று கேட்டபோதே நான் உங்கள் இருவரையும் சகோதரிகளாக மனதில் மதித்துவிட்டேன். ஆகவே என்னை மறந்து என் தமயனை மணந்து இன்புற்று வாழுங்கள். அவர் உங்கள் இருவருக்காகத் தவங் கிடக்கின்றார்.

நாங்களும் தங்களைப் போல் தங்களுடன் சன்னியாசினிகளாக இருந்து காலங்கழிக்கவே விரும்புகின்றோம்.

ஆடவன் சன்னியாசியாகத் தனித்துவாழலாம். பெண்கள் அங்ஙனம் வாழ இயலாது. கொடிகள் எங்காவது தனியாக இயங்குவதைப் பார்த்திருக்கின்றீர்களா? ஒரு கொழுகொம்பைச் சுற்றித்தான் படர்ந்து விளங்கும். ஆகவே என்வேண்டுகோளை நிறைவேற்றி என்னையும் ஆறுதலடையச் செய்யுங்கள் என்றதின் மீது அவர்கள் இருவரும் இசைந்தனர். தன் தமையனுருக்கு அவ்விரு பெண்களையும் மணம் செய்வித்துவிட்டு, ஒரு ஆசிரமம் நிறுவி சமயத்தொண்டாற்றி, அலைவாயுகந்த அண்ணலார் அருளடிகளை அடைக்கலமாகக் கொண்டு அஞ்சலி செய்து வாழ்ந்தான் தியாகமூர்த்தி இராமசாமிசாமி.

தன் பொருட்டு சகல தியாகங்களையுஞ் செய்து தவ வாழ்க்கையை மேற்கொண்ட தன் தம்பியை, இல்லறவாழ்க்கையில் ஈடுபடுத்தி இன்புற வைக்க எண்ணி, எங்கெங்கும் தேடி அலைந்தான் அண்ணன் பாண்டுரங்கன். இறுதியில் அவன் ஆசிரமத்தைக் கண்டு ஆனந்த மடைந்தான். அதனுள் நுழைகையில் தன் தம்பியும் ஒரு யுவதியும் பேசிக்கொண்டிருப்பதையும் உணர்ந்த அவன், ஒதுங்கி நின்று அவர்கள் உரையாடலை உற்றுக் கேட்டான்.

நானும் தங்களோடு இருந்து தொண்டாற்ற வந்துள்ளேன். எனக்கு அனுமதி யளிக்கவேண்டும். பெண் ஒருவளோடு அதிலும் என் போன்ற யுவதியோடு இருந்து ஒரு பற்றும் இல்லாது தொண்டாற்றி வந்தாலும் உலகம் பழிக்குமே என்று அஞ்சுகிறீர்கள். ராமகிருஷ்ண பரமஹம்ஸர் சாரதாமணி தேவியோடு இருந்து தவத் தொண்டாற்றவில்லையா? வாழ்ந்தால் புருடன் மனைவியாகத்தான் வாழவேண்டுமா? ஏன் சகோதரன் சகோதரி என்ற முறையில் வாழ்ந்து தவத் தொண்டாற்றக் கூடாது? எனவே என்னை மறுக்காமல் ஏற்க வேண்டுகிறேன்.

சகோதரி! உன் உண்மையான கருத்தை உணர்ந்தேன். நெருப்பும் வெண்ணெயும் நெருங்கி யிருக்கலாமா? வாழ்க்கை

யில் வழுக்கி விழும் வாலிபப் பருவத்தினர் நெருங்கிப் பழகுவது விஷப் பரிட்சைப் புரிவதாகும். பற்றற்ற மனத்தோடு வாழ்வதாயினும் பரிசோதனைக் காளாக நேரும். ஆகவே சகோதரியே! உனக்கு உண்மையில் தெய்வத்தொண்டாற்ற எண்ணமிருக்குமாயின் ஒருவரை மணந்து இருவருமாக இங்கு வந்து இருந்து தொண்டாற்றுங்கள்.

பெண்ணொருவளோடு பற்றில்லா வகையிலிருந்து தொண்டாற்றப் பயப்படும் தாங்கள் மாயையை எங்ஙனம் வெல்லப் போகின்றீர்கள்? நெருங்கிப்பழகினாலும் நேர்மை குன்றேன் என்று இது போன்ற சோதனையில் வெற்றிபெற்று பிறருக்கு எடுத்துக்காட்டான பரிசுத்தவாழ்க்கை லட்சியத்தைத்தாங்கள் வெளிப்படுத்தவேண்டாமா? கரவான நெஞ்சத்தோடோ, காதல் உள்ளத்தோடோ, வாழ்க்கைத் துணைவியாக வாழ விரும்பியோ தங்களை அணுகவில்லை. என்னைத் தங்களுடனிருந்து தொண்டாற்ற அனுமதிப்பீர்களாயின், இந்த உண்மையை என் எதிர்காலத்தில் உணர்வீர்கள். திருமுருகப் பெருமான் திருப்புகழைப் பாடவும், கேட்கவும், உருகவும், அதனால் உண்டாகும் பேரின்பத்திலாழ்ந்துத் திளைக்கவும், அப்பெருமானது பேராற்றலையும், பெருங் கருணையையுங் குறித்துப் பேசிப் பேசி மகிழவும், அப்பெருமானை அழகான மலர்களால் அலங்கரித்து, அர்ச்சித்து கண்ணாரக் கண்டு கண்டு களிக்கவும், அப்பெருமானது திருவுருவங்களாய் எண்ணி ஏழை மக்கட்கு ஆத்திகப் பணிபுரிந்து ஆனந்த மெய்தவுமே தங்களை நோக்கி வந்தேன். மேலும் தாங்கள் போகவாழ்வைத் தமயனுக்காகத் துறந்து தியாகவாழ்வை மேற்கொண்ட உத்தமத் தவசிலர் என எங்கும் போற்றிப் புகழ்வதைக் கேட்டு தங்களை அடுத்தேன். தங்களைப் போன்று போக வாழ்வைத் துறந்து யோக வாழ்வைப் பெறவே வந்தேன். கள்ளமில்லாத உள்ளத்தோடு வந்த என்னை உள்ளமிரங்கி ஆட்கொள்ள வேண்டுகின்றேன் என்றாள் அந்த யுவதி.

சகோதரியே! உனது உயர்ந்த பேச்சும், உள்ளமும் அறிந்தேன். எனது தவவாழ்க்கை அவ வாழ்க்கை யாகாமல் பிறவிப் பயன்பெற நீங்கள் கூறும் பரிட்சையிலும் வெற்றி பெறுவது நலந்தான். ஆகவே நீங்களும் இங்கு தங்கி என்னுடன் பிறந்த சகோதரியாக யிருந்து ஆத்மார்த்திக அருள் பணி புரிந்து பெருங்கருணைப் பெருமானது பேரருளைப் பெறுவாயாக என அனுமதியளிக்கின்றேன்.

இனி தன் கருத்தை வற்புறுத்துவதில் பயனில்லை என்று உணர்ந்த பாண்டுரங்கன், தன் செல்வங்களை ஆசிரமத்துக்கு அளித்துவிட்டு, இருமனைவிகளுடன் தன் தம்பியோடு ஆசிரமத்திலேயே தங்கி எல்லோருமாகத் தெய்வத்தொண்டில் ஈடுபட்டு பேரின்ப வாழ்வு நடத்தி, பிறருக்கும் வாழும் வழிகாட்டி வாழ்ந்தனர். வேலும் மயிலும் துணை.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ சிற்சபேசாய மங்களம்

பொன்னங் கோயில்

27—8—53

சிவாலய குடமுழக்கு நிகழ்ச்சி

(பொ. மு. அ. இராமலிங்கம் பிள்ளை, பொன்னங் கோயில்)

உலகிலுள்ள உயிர்கட் கெல்லாம் அருள்புரியும் பொருட்டு இன்பக் கூத்தாடும் நடராசப்பெருமான் வீற்றிருக்கும் தில்லை யின் மேற்பால் ஒன்பது கல் தொலைவில் வெள்ளாற்றின் கரையின் தென்பால் பொன்னங் கோயிலென்னும் ஊர் உளது.

இவ்வூரில் இருந்த பழமை வாய்ந்த சிவாலயம் ஏதோ காரணத்தால் மறைந்த போதிலும் அச் சிவலிங்கமூர்த்தி மாத்திரம் குளக்கரையில் வன்னிமரத்தடியில் விளங்கி நின்றது.

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" எனவும், "திருக்கோயிலில்லாத திருவிலூரும்—ஊரல்ல அடவிகாடே" எனவும், "ஆலயம் தானும் அரனெனத் தொழுமே" எனவும் வரூஉம் ஆன்றோர் மொழிகளையும், இறைவன் உயிர்கட்கு அருள் புரிய உருவத்திருமேனி கொள்ளுவா னென்பதையும், மக்கள் திருக்கோயில் வழிபாடு செய்தே சிவநெறியை அடைவர் என்பதையும் நன்குணர்ந்த இவ்வூர்ச் சிவநேசச் செல்வரான மிராசுதார் திரு. க. கோவிந்தராஜ பிள்ளையவர்கள் அவனரு ளாலே சிவன் கோயிலையும், ஏனை ஊர்ப் பெருமக்கள் விநாயகர் முதலிய பரிவாரங்கட்குக் கோயிலையும் திருப்பணி செய்து முடித்தனர்.

வரலாறு:—

முன்னொருகாலத்தில் சிவபெருமான் கைலையிலிருந்து தன் நண்பனை குபேரனோடு பல தலங்களையும் கண்டு தென் திசை நோக்கி வருங்கால் வெள்ளாற்றின் கரையில் தங்கினர். அப்போது குபேரன் அவ்வாற்றில் நீராடி, தன் ஆன்மார்த்த பூசை செய்து அம் மூர்த்தியான ஸ்வர்ணாகர்ஷண பைரவரை ஆராதித்து அவ்விடத்தில் இச்சிவலிங்கப் பெருமானை ஸ்தா பித்து வழிபட்டனன். அதுபற்றி அவ்வூருக்குப் 'பொன்னங் கோயில்' என்றும் இறைவனுக்குத் தநதேசுவரர் என்கிற மகாலிங்க மூர்த்தி என்றும் பெயர் வழங்கலாயிற்று.

இக்கோயிலில் விஜய ஆண்டு ஆவணித்திங்கள் 7-ம் நாள் ஞாயிற்றுக் கிழமை தொடங்கி 11-ம் நாள் வியாழக் கிழமை வரை வேத சிவாகம முறைப்படி சிறப்பாகக் குடமுழக்கு விழா நடைபெற்றது.

விழாத் தொடக்க முதல் இறுதி வரைத் தில்லைத் திருமுறைக் கழகத் தலைவர் திரு. ஆ. சு. கணபதிப்பிள்ளை யவர்கள் தம் கழக உறுப்பினர்களுடன் வந்திருந்து திருமுறைப் பாராயணமும், சைவ சமயச் சொற்பொழிவும், குடமுழக்கு நிகழ்ச்சியும் சிறப்பாக நடைபெறச் செய்தனர்.

முதல் நாள் (26-8-53) இரவு திருமுருக — கிருபானந்தவாரி அவர்கள் "பார்வதி திருமணம்" பற்றிச் சிறந்ததோர் விரிவுரை ஆற்றினர்.

குடமுழக்கன்றிரவு திருக்கல்யாணமும், சுவாமி புறப்பாடும் மிகச் சிறப்புடன் நடைபெற்றது. மக்கள் பலரும் விழாவைக் கண்டு இறைவனைத் தெரிசித்து அறிவுரைக் கேட்டின்புற்றனர்.

அறமொழிகள்

40. பாவச் செயல்கள் பெருகும்போதெல்லாம் பஞ்சமும் பசிப்பிணியும் பெருகும். நஞ்சை யருந்திவிட்டு நல்ல ஆரோக்கியத்தை எதிர்ப்பார்க்க முடியுமா?

41. இறைவழிபாடும், அறமும் இருக்குமிடமெல்லாம் மழை இருக்கும். தாய் உள்ள யிடத்தில் சேய் இருப்பது இயற்கை தானே!

42. பெரியோரைப் பற்றிப் பேசுவதும், அவர் உபதேசங்களைச் சிந்திப்பதும் பெரும் நன்மை பயக்கும். வெல்லமும், சர்க்கரையும் உண்டால் வாய் இனிக்கத்தானே செய்யும்?

43. நல்லவர் அல்லாதவர் என்பதை அவரவர் வாய்ச் சொல்லே விளக்கும். அகத்தில் உள்ளதை முகத்தில் காண்பது போல்.

44. உயர்ந்தவர் என்பது செல்வத்தால், செல்வாக்கால், வாசிப்பால் அல்ல; சிறந்த ஒழுக்கத்தால் தான். பொன் கிண்ணத்திலுள்ள நஞ்சு போற்றப்படுமா என்ன?